வடகிழக்கு பருவமழை 2018
தனிகவனம்/ மிக அவசரம்

# விழுப்புரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப.,

ந.க.பே.மே/ 24388 /2018 நாள்: 11.09.2018

பொருள்: பேரிடர் மேலாண்மை - விழுப்புரம் மாவட்டம் - வடகிழக்கு பருவமழை 2018 - வடகிழக்கு பருவமழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலங்களுக்கு மழைபுள்ளிவிவரம், மனித உயிரிழப்புகள், கால்நடை இழப்புகள், குடிசை வீடு சேதங்கள், பயிர்சேதங்கள் போன்றவைகள் குறித்து உடனுக்குடன் புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகள் சமர்ப்பிக்கும் பொருட்டு வட்ட அளவிலான துணை ஆட்சியர் நிலையில் மண்டல அலுவலர்கள் (Taluk Level Nodal Officers)நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை: கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்: ந.க. RC.No. N.C.I(4)/3838/2018, நாள்: 25.08.2018

..............

ஆணை:

2018 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள் குறித்த வாராந்திர அறிக்கை அனுப்பிடவும், மற்றும் அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலங்களில் மழைப்புள்ளி விவரங்கள், மழை/புயல்/ வெள்ளம் மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் மனித உயிரிழப்புகள், கால்நடை இழப்புகள், குடிசை வீடு சேதங்கள், பயிர் சேதங்கள் போன்றவைகள் குறித்த புள்ளி விவரங்களை உடனுக்குடன் அறிக்கையாக அனுப்பிடவும், கனமழை/வெள்ளத்தினால் பாதிப்படையும் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் மற்றும் இதர பொருட்கள் வழங்குவது தொடர்பான விவரங்களையும் உடனுக்குடன் அறிக்கை வாயிலாக சமர்ப்பித்திடும் பொருட்டும், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட 13 வட்டங்களுக்கும் மண்டல அலுவலர்கள் (Taluk Level Nodal Officers) நியமனம் செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | வட்டத்தின் பெயர் | நியமனம் செய்யப்படும் மண்டல அலுவலர்கள் |
|---|---|---|
| 1 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம்.<br>கைப்பேசி எண்: 9445000424 |
| 2 | வானூர் | தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி), விழுப்புரம்.<br>கைப்பேசி எண்: 9445461760 |
| 3 | விக்கிரவாண்டி | மாவட்ட வழங்கல் அலுவலர், விழுப்புரம்.<br>கைப்பேசி எண்: 9445000200 |
| 4 | திண்டிவனம் | சார் ஆட்சியர், திண்டிவனம்.<br>கைப்பேசி எண்: 9445000423 |
| 5 | செஞ்சி | தனித்துணை ஆட்சியர்/ மாவட்ட மேலாளர், (TAHDCO), விழுப்புரம். கைப்பேசி எண்: 9445029485 |
| 6 | மரக்காணம் | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், விழுப்புரம். கைப்பேசி எண்: 9445477831 |
| 7 | மேல்மலையனூர் | வடிப்பக அலுவலர்/துணை ஆட்சியர், ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை லிமிடெட்,செம்மேடு,செஞ்சி.<br>கைப்பேசி எண்: 9445074623 & 9965145164 |
| 8 | திருக்கோவிலூர் | சார் ஆட்சியர், திருக்கோவிலூர்.<br>கைப்பேசி எண்: 9445000422 |

| | | |
|---|---|---|
| 9 | உளுந்தூர்பேட்டை | உதவி ஆணையர் , (கலால்), விழுப்புரம்.<br>கைப்பேசி எண்: 9445074604 |
| 10 | கண்டாச்சிபுரம் | தனித்துணை ஆட்சியர் (Arbitration),விழுப்புரம்.<br>கைப்பேசி எண்: 9659251396 |
| 11 | கள்ளக்குறிச்சி | வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி<br>கைப்பேசி எண்: 9445000421 |
| 12 | சங்கராபுரம் | திட்ட அலுவலர், பழங்குடியினர் நலம், கல்வராயன்மலை.<br>கைப்பேசி எண்: 9840556747 |
| 13 | சின்னசேலம் | வடிப்பக அலுவலர்/துணை ஆட்சியர், தரணி சர்க்கரை மற்றும் கெமிக்கல்ஸ் ஆலை லிட்.,அலகு-3, கலையநல்லூர், சங்கராபுரம் வட்டம். கைப்பேசி எண்: 9445074624 & 9994092207. |

மண்டல அலுவலர்கள் தங்கள் மண்டலத்தில் உள்ள நிவாரண மையங்களை பார்வையிட்டு அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும், மற்றும் தங்கள் மண்டலத்தில் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் (Vulnerable areas) கண்டறியப்பட்ட முதல் பொறுப்பாளர்களுக்கு (First Responders) பேரிடர் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும்.

2018 வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த விவரங்கள்

**1. தனிக்குழு அமைத்தல்**

மண்டல அலுவலர்கள் தங்கள் மண்டலத்தில் உள்ள வட்ட அளவில் அல்லது குறுவட்டங்கள் அளவில் (2015-ம் ஆண்டு மழை/வெள்ள தாக்கத்தின் அடிப்படையில்) குழுக்கள் அமைத்திட வேண்டும். அக்குழுவில் வருவாய்த்துறை, காவல்துறை, ஊரகவளர்ச்சித்துறை, வேளாண் துறை, பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு), கால்நடைத் துறை, மின்சாரத் துறை,மீன்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத் துறை, உணவுப்பொருள் வழங்கல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை ஆகிய துறைசார்ந்த அலுவலர்களைக் கொண்டு நியமனம் செய்து செயல்முறை ஆணை பிறப்பித்திட வேண்டியது.

**2. தனிக்குழு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்**

மண்டல அலுவலர்களின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள தனிக்குழு அலுவலர்களுக்கு 2018 வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து குழுக்கூட்டம் நடத்தி பயிற்சி அளித்தல் வேண்டும். பயிற்சி அளித்தமைக்கான அறிக்கையினை புகைப்படத்துடன் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

**3. தனிக்குழு அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளுதல்**

- தனிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு தங்களது மண்டலத்தில் கடந்த வடகிழக்கு பருவமழை/ புயல்/ வெள்ளம் ஆகியவற்றினால் அதிகளவு பாதிப்படைந்த பகுதிகளை vulnerable, high vulnerable, Moderate என்ற விகிதாசார அடிப்படையில் கண்டறிந்து பட்டியலிட்டு அறிக்கையினை மண்டல அலுவலர்கள் உடனடியாக சமர்ப்பித்திட வேண்டியது.
- மேற்கண்ட பட்டியலின்படிகண்டறியப்பட்டுள்ள பகுதிகளுக்கு தனிக்குழு அலுவலர்கள் நேரிடையாக கள ஆய்வு மேற்கொண்டு தாழ்வான பகுதிகள் (Lowlying Areas),ஊரகப் பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகும் ஏரிகள், மதகுகள், தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலையினை ஒட்டியுள்ள ஏரிகள், கால்வாய்கள், பாலங்கள், மேம்பாலங்கள் , பழுதடைந்த மின்கம்பங்கள் , சாலைகள்

ஆகியவைகள் குறித்து தற்கால நிலையினை பார்வையிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் (Requirements for Responsibilities for Preparedness) குறித்த கருத்துருவினை தகுந்த புகைப்படத்துடன் தனிக்குழு அலுவலர்களிடமிருந்து பெற்று மண்டல அலுவலர்கள் தங்களது அறிக்கையினை தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

**4. குறைகளை கண்டறிந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்கள்**

- தனிக்குழு அலுவலர்களால் கண்டறியப்பட்டுள்ள மழையினால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களைக் கொண்டு நிவர்த்தி செய்து **(Rectify Report)**, எதிர்வரும் காலங்களில் மழை/வெள்ளம்/புயல் போன்றவைகளால் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் தற்போதுமேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விவரஅறிக்கையினை தகுந்த புகைப்படங்களுடன் 27.09.2018க்குள் சமர்ப்பித்திட வேண்டியது.
- நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், ஏரி உடைப்புகளை சரிசெய்ய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களையும் பிரதிவாரந்தோறும் கீழ்க்கண்ட படிவத்திலான அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது. ( ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு முன்னரும், ஆக்கிரமிப்பு களை அகற்றும்போதும், அகற்றிய பின்னரும் புகைப்படம் எடுத்திட வேண்டியது)

**Encroachments Removal on Watercourses likely to breach**
**(First Week Report)**

| | PWD/ MI Tanks | | | Culverts | | | Supply Channels | | | Deepen Channels | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Zone | Total | Encroachments/ To be De-silted | Removed/ De-silted | Total | Encroachments/ To be De-silted | Removed/ De-silted | Total | Encroachments/ To be De-silted | Removed/ De-silted | Total | Encroachments/ To be De-silted | Removed/ De-silted |

**Encroachments Removal on Watercourses likely to breach (Next Every Week )**

| | PWD/ MI Tanks | | | | | Culverts | | | | | Supply Channels | | | | | Deepen Channels | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Zone | Total | Encroachments/ To be De-silted | during the week De-silted | Removed / De-siltesilted till last week | Balance to be Cleaned | Total | Encroachments/ To be De-silted | during the week De-silted | Removed / De-siltesilted till last week | Balance to be Cleaned | Total | Encroachments/ To be De-silted | during the week De-silted | Removed / De-siltesilted till last week | Balance to be Cleaned | Total | Encroachments/ To be De-silted | during the week De-silted | Removed / De-siltesilted till last week | Balance to be Cleaned |

- தங்கள் மண்டலத்திற்குரிய தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், ஊரக சாலைகள் ஆகியவற்றின் குறுக்கே அமைந்துள்ள ஆறுகள், குறுகியபாலங்கள், மேம்பாலங்கள் ஆகியவற்றின் பெயர்கள் மற்றும் அளவுகளுடன் விவரங்களை கண்டறிந்து வைத்திருப்பதுடன், கட்டுமானத்தன்மையினை உறுதி செய்திட தக்க நடவடிக்கை மேற்கொண்டு **கீழ்க்கண்ட** படிவத்தில் **விவரங்களை பூர்த்தி செய்து புகைப்படத்துடன் அறிக்கை வாயிலாக சமர்ப்பித்திட வேண்டியது.**

| Sl. No. | Zone | National Highways Crossing | | | State Highways Crossing | | | Rural Roads | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Total | De-silted in sideways Tanks/ Culverts/ Supply Channels | Balance | Total | De-silted in sideways Tanks/ Culverts/ Supply Channels | Balance | Total | De-silted in sideways Tanks/ Culverts/ Supply Channels | Balance |
| | | | | | | | | | | |

**5. கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை விவரங்கள்**

- மழைக்காலங்களில் அவசர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏதுவாக சம்பந்தப்பட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநரைக் கொண்டு தனியார் மருத்துவமனை மருத்துவர்களுடன் கூட்டம் நடத்தி , தனியார் மருத்துவமனை குறித்த விவரங்கள் மற்றும் தொலைபேசி எண்கள் ஆகியவற்றினை கைவசம் வைத்திருக்கும் பொருட்டு மண்டல அலுவலர்கள் சம்பந்தப்பட்ட , சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநருக்கு கடிதம் அனுப்பிட வேண்டியது. இந்நேர்வு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை சமர்ப்பித்திடவேண்டியது.

- மண்டல அலுவலர்கள் தங்கள் வட்டத்திற்குட்பட்ட ஏரிகள், மதகுகள், கால்வாய்கள், குளம்/குட்டைகள் மற்றும் இதர நீர்நிலைகள், தாழ்வான பகுதிகள், சாலைகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மருத்துவ மையங்கள், துணை சுகாதார மையங்கள், தனியார் மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், பொதுக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள், திருமண மண்டபங்கள், பல்நோக்கு புயல்பாதுகாப்பு மையக்கட்டிடங்கள், கடற்கரையோரப் பகுதிகளை ஆய்வு செய்தல் மற்றும் நீச்சல் வீரர்கள் ஆகியவற்றின் விவரங்களை தொடர்பு கொள்ளும் வகையில் உரிய தொலைபேசி எண்ணுடன் பெற்று அறிக்கையினை சமர்ப்பித்திட வேண்டியது.

- . மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இயங்கும் அவசர கால செயல்மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077ஐ பருவமழையின்போது அவசர காலத்தில் அனைத்து பொதுமக்களும் , அலுவலர்களும் தொடர்பு கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டியது.

- மழைக்காலத்தின் போது உபயோகப்படுத்தப்படும் மணல்மூட்டைகள்,சவுக்குமரதடுப்புக்கட்டைகள் ஆகியவற்றை எளிதில் பயன்படுத்தும் வகையில் அருகாமையில் உள்ள இடங்களை தேர்வு செய்து அதிகளவில் இருப்பு வைத்துக் கொள்ள வேண்டியது.

**6. செயல்முறை விளக்க நிகழ்ச்சி (Mockdrill) நடத்துதல்**

மண்டல அலுவலர்கள் தங்களது வட்டத்திற்குட்பட்ட கடந்த 2015-ம் ஆண்டு அதிகளவு மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்வு செய்து, பொதுமக்கள் வடகிழக்கு பருவமழையிலிருந்து தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்பது பற்றி அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் முன்னிலையில் செயல்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தி , அதற்கான அறிக்கையினை தகுந்த புகைப்படத்துடன் 27.09..2018க்குள் தவறாமல் சமர்ப்பித்திட வேண்டியது.

அனைத்து மண்டல அலுவலர்களும் தங்களது குழு உறுப்பினர்களைக் கொண்டு பல்வேறு வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு,மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பணி முன்னேற்ற அறிக்கையினை பிரதிவாரம் வெள்ளிக்கிழமை தோறும் தவறாமல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு சமர்ப்பித்திட வேண்டியது.

2018 வடகிழக்கு பருவமழை காலங்களில் (அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை) மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

1. மண்டல அலுவலர்களின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள குழு உறுப்பினர்களின் விவரங்கள், தொலைபேசி எண்கள்,ஈமெயில் முகவரி மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் தொலைபேசி எண்கள்,ஈமெயில் ஆகியவற்றை தயார் செய்து மழைக்காலங்களில் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது.

2. தனிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு தங்கள் வட்டத்தில் மழை/வெள்ளத்தினால் பாதிக்கப்படகூடிய பகுதிகளின் வரைபடங்கள் (Vulnerability Maps (Place and People)for Flood Prone Areas), கிராம வரைபடங்கள், வழித்தடவரைபடங்கள் (Evacuation Routes)குண்டும் குழியுமான பகுதிகள் ,சுயஉதவி குழுக்கள், நாட்டு நலப்பணித்திட்டம், அரசு சாரா நிறுவனங்கள், தேசிய மாணவர்படை ஆகியவைகள் குறித்த விவரங்கள் தொகுத்து வைத்திடவும், மழைக்காலங்களில் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் பொருட்கள் குறித்த விவரங்களையும் கைவசம் வைத்திருக்கவும் வேண்டியது.

**3. வடகிழக்கு பருவமழையின் போது மழையளவு நிலவரங்களை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள் வாயிலாக தினந்தோறும் தவறாமல் காலை 6.30 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மைப் பிரிவில் தெரிவித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது.**

4. மழைக்காலங்களில் கடற்கரையோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக அருகில் உள்ள பொதுக் கட்டிடங்களில் தங்க வைத்திடவும், உணவுகள் அளித்திடவும் மற்றும் பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்களை உபயோகப்படுத்திக் கொள்ள புயல் பாதுகாப்பு மைய குழுக்களை உரிய நேரத்திற்கு முன்னால் அணுக வேண்டியது.

5. மழைக்காலத்தின்போது மனித உயிரிழப்புகள், கால்நடை இழப்புகள் , குடிசைசேதங்கள் மற்றும் இதர சேதங்கள் குறித்த அறிக்கையினை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்று உடனுக்குடன் அனுப்பி வைத்திட வேண்டியது.

6. மழை/ புயல் ஏற்படும் போது மின்மாற்றிகள் மற்றும் மின்கம்பங்களை உடனடியாக மாற்றிடும் வகையில் எவ்வளவு இருப்பு உள்ளது , எவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பவை குறித்த விவரங்களை கைவசம் வைத்திருக்க வேண்டியது.

7. மழைக்காலத்தின்போது அணைகள், ஏரிகள் நீர்மட்டங்கள்/ கொள்ளளவு/நீர்வரத்து/ நீர்வெளியேற்றம் ஆகியவை குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களிடமிருந்து தொலைபேசி வாயிலாக கோரி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆட்சியர் அலுவல பேரிடர் மேலாண்மைப் பிரிவிற்கும் உடனடியாக எஸ்.எம்.எஸ்./ ஈ.மெயில் வாயிலாக அனுப்பிட வேண்டியது.

வடகிழக்கு பருவமழைக்காலங்களில் அனைத்து மண்டல அலுவலர்களும் எவ்வித சுணக்கமுமின்றி சிறப்பு கவனம் செலுத்தி, தனிக்குழு அலுவலர்களிடமிருந்து அறிக்கையினை விரைவாக பெற்று உடனுக்குடன் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பேரிடர் மேலாண்மைப் பிரிவிற்கும் தெரிவித்திடுமாறு மண்டல அலுவலர்களுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

ஒம்.இல.சுப்பிரமணியன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம்.

//உ.ந.உ.ப.//

மாவட்ட ஆட்சியருக்காக

பெறுநர்

சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்கள், விழுப்புரம் மாவட்டம்.

**நகல்:** அனைத்து வருவாய் வட்டாட்சியர்கள், விழுப்புரம் மாவட்டம்.

**நகல்:** கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

**நகல்:** மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்களின் நேர்முக எழுத்தர்கள்

**நகல்:** பேரிடர் மேலாண்மைப் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம் (இருப்பு கோப்புக்கு)